1968 ஆகஸ்ட் 19]

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுதெல்லாம் பொது மக்கள் கோதுமையையும், கோதுமைப் பண்டங்களையும் சாப்பிட மிகவும் நல்லபடியாகப் பழகிவிட்டார்கள். அப்படி இருக்க 1965-66-ம் ஆண்டு அமைச்சர் அவர்கள் கணக்குப்படி அதிகப்படியான கோட்டா கோதுமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு குறைந்த அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கேட்டு கொடுக்கவில்லையா அல்லது கேட்கவே இல்லையா? அதற்குக் காரணம் என்ன? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவே சொன்னேன். இந்த அரசு வருவதற்கு முன்னல், இரண்டு வருஷங்களுக்கு முன்னல் இரண்டு லட்சம் டன் அளவுக்கு இந்த மாநிலத்திற்குக் கோதுமை கிடைத்திருக்கிறது. 1966-ல் 3 லட்சம் டன் அளவுக்குக் கூடக் கிடைத்தது. ஆனல் நாங்கள் வந்த பிறகு 1½ லட்சம் டன்தான் கொடுத்தார்கள். கடந்த ஓராண்டு காலமாக முதலமைச்சர் அவர்களும், உணவுத் துறையும் மிக வற்புறுத்தி வந்த காரணத்தால் தற்போது கொஞ்சம் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நிலை இருக்கிற கோதுமையும், கோதுமைப் பொருள்களும் முழு அளவு விற்காமல் இருக்கின்றனவே என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. பேரவையின் அனுமதியுடன் எஞ்சிய கேள்விகளை சிறிது அதிக நேரம் எடுத்துக் கொண்டு முடிக்க விரும்புகிறேன்.

Relief to victims of fire accidents

* 32 *Q*.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether any change has been made in the grant of money to the affected families due to fire accidents?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம்.

* 33 வினு.—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தீ விபத்துக்களினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட கலெக்டர்களால் வழங்கப்படும் நிவாரணத் தொகையை அதிகரிக்க உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை; தீ விபத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் ரொக்கத் தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1—7 -1967-லிருந்து ரூ. 30-லிருந்து ரூ. 60 ஆகவும், உடை மானியம் ரூ. 10-லிருந்து ரூ. 20 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன.